BPC

# நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்:

முன்னிலை : திரு.சி.சுப்ரமணியம், டி.சி.இ.,

ந.க.எண்.2852/2018 / வே.ம.3

நாள்:16.08.2018

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு, மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்–2017 0.95 ஏக்கர் (3846.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக.

பார்வை :

1) அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்04.05.2017.
2) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193 /2017 / எல்ஏ2, நாள்.30.10.2017, 31.10.2017,07.11.2017,17.11.2017 மற்றும் 20.12.2017.
4) மனுதாரர். திரு. M. ஜெகநாதன் (ம) P. ஆண்டியப்பன் அவர்களின் விண்ணப்பம் நாள்.20.03.2018.

---

**உத்திரவு**

பார்வை (1 ) மற்றும் (2) –ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)–ல்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், அம்மூர் தேர்வு நிலை பேரூராட்சி, அம்மூர் கிராமம், சர்வே எண். 542/4பி2–ல் 0.95 ஏக்கர் (3846.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண். 1161(R)/2018 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 3846.00 ச. மீ (அ) 41382.00 ச.அடி (அ) 0.95 ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : 28 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 7 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : (9, 13, 14, 24, 25, 27, 28) |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : 8753.00 ச.அடி |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 19 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : (1, 2, 4-8, 10-12, 15-23, 26) |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : 22798.00 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு (மனை எண்கள்:3, 15, 16(ப) ) | : 2576.00 ச.அடி – 10.15% |

M. Smt
P. A. F

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

1) பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/0080561/2017, நாள். 12–04–2018 –ன் படி விற்கப்படாத 21 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.10,500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் (online) வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– (ரூபாய் வீதம் (ரூபாயில் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 75/– ரூபாய் வீதம் (ரூபாயில் எழுபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|
| விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகளின் பரப்பு குறித்த விவரம் மற்றும் அதற்குரிய வளர்ச்சிக்கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்துவது குறித்த விவரம் தனித்தாளில் தயாரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| " 0217,Urban Development -60 Other Urban Development Scheme-800 .Other receipts AT Receipts under Regularization charges of Unapproved Layout and Plots –DTCP (DPC 0217 60800 AT 0007) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (ட) (ii) –ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக் காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

16/8

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

16/8/18

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மற்றும் உத்தரவு நகல்

பெறுநர்:

1) செயல் அலுவலர்,
அம்மூர் கிராமம்,
அம்மூர் தேர்வு நிலை பேரூராட்சி,
வாலாஜா வட்டம்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

2) திரு. M. ஜெகநாதன் (ம) P. ஆண்டியப்பன்,
எண்.28, அம்மூர் ரோடு,
ராணிப்பேட்டை,
வேலூர்–632402.

| | |
|---|---|
| 3) உதவி இயக்குநர் (நில அளவை) வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4) வட்டாட்சியர், வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5) சார்பதிவாளர், வாலாஜா சார்பதிவாளர் அலுவலகம், வாலாஜா. | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 6) நகர் ஊரமைப்பு ஆணையர், 807, அண்ணா சாலை, சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |

7) கோப்பு

8) வைப்பறை

அம்மூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்களின் செயலாணைகள்
முன்னிலை: திருமதி. கெ. ரேவதி

நாள். 26.02.2019.

ந.க. எண். 200–1 / 2018

பொருள் :- மனைப்பிரிவுகள்—வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம்— அம்மூர் பேரூராட்சி—சர்வே எண்கள் 452/4பி2 இல் அமைந்துள்ள 0.95 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவில், நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் ஒப்புதல் வழங்கியுள்ளது–இதில் உள்ளடங்கிய விற்கப்படாத மனைகள் ( மனை எண் 3,15 மற்றும் 16(ப) பூங்கா தவிர) 28 மனைகளை வரன்முறைப்படுத்தி உள்ளாட்சி நிறுவனத்தின் ஒப்புதல் வழங்குதல்—தொடர்பாக

பார்வை :- 1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந,வ. 4(3) துறை, நாள். 04.05.2017.

2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ. 4 (3) துறை, நாள் 13.10.2017.

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர்–9 அவர்களின் நடவடிக்கைகள் ந.க. எண். 2855/ 2018 / வே.ம. 3, நாள். 30.08.2018.

4. பேரூராட்சி மன்ற தீர்மான எண் 234 நாள் 10.10.2018

-------

உத்திரவு.

தமிழ் நாடு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப் படுத்துதல் சட்டம், 2017, பார்வை 01 இல் குறிப்பிட்ட அரசாணையில் வெளியிடப்பட்டு, பார்வை 02 இல் குறிப்பிட்ட அரசாணையில் இதற்கு திருத்தங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில், வேலூர் மண்டலம், வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், அம்மூர் கிராமம், சர்வே எண்கள் 452/4பி2 இல் அமைந்துள்ள 0.90 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவை வரன்முறைப்படுத்தி, கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியும், இம்மனைப்பிரிவிற்கு மவ / ந.ஊ.து.இ. (வே.ம) எண். 1161 (ஆர்) / 2018 என எண்ணிடப்பட்டும், பார்வை 03 இல் குறிப்பிட்ட வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | 41382 ச. அடி (அல்லது) 3846.00 ச.மீ. |
| 2 | மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த மனைகளின் எண்ணிக்கை | 28 (மனை எண்கள் 1 முதல் 28 வரை) |
| 3 | விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | மனை எண்கள். 9,13,14,24,25,27,28 – மொத்த பரப்பு 8753.00 ச.அடி. |
| 4 | விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | 19 (மனை எண்கள். 1,2,4,5,6,7,8,10,11,12, 16(ப), 17,18,19,20, 21,22,23,26 ) –22798.00 ச.அடி, ( மனை எண் 3,15 மற்றும் 16(ப) பூங்கா இடம் தவிர) மொத்த பரப்பு 2576 ச.அடி. |

மேற்குறிப்பிட்ட கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியுள்ள சர்வே எண்களில் அமைந்துள்ள 1 முதல் 26 வரையிலான 26 மனைகளுக்கான ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தின்படி, பார்வை 01, 02 இல் குறிப்பிட்ட அரசாணைகள், பார்வை 03 இல் குறிப்பிட்ட வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ஆகியவற்றின்படி, விற்கப்படாத 19 மனைகளை (மனை எண் 3,15 மற்றும் 16(ப) பூங்கா இடம் தவிர) வரன்முறை செய்தலுக்காக, கீழ்க்கண்ட விவரப்படியான கட்டணங்களை, மேற்படி மனைகளின் உரிமைதாரர்களான திரு. ஜெகன்நாதன், அம்மூர் ரோடு, இராணிப்பேட்டை ஆகியோர் செலுத்தியுள்ளனர்.

M. Jm
P. A

1. ஆய்வுக் கட்டணம்.

தமிழ் நாடு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப் படுத்துதல் சட்டம், 2017, பிரிவு 12 இன்படி ஆய்வுக் கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ. 500/– வீதம் செலுத்தப்பட வேண்டும். இதன்படி, மொத்த மனைகள் 21 க்கான ஆய்வுக் கட்டணம் ரூ. 10500/– செலுத்தப்பட வேண்டும். இத்தொகையில், பார்வை 03 இல் குறிப்பிட்ட கடிதத்தின்படி, Online Registration No. DTCP/L/0080561/2017, Dt. 12.04.2018 இல், ரூ.10,500/– செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. வரன்முறைப்படுத்துதல் கட்டணம்.

தமிழ் நாடு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப் படுத்துதல் சட்டம், 2017, பிரிவு 9 இன்படி வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 30/– வீதம் செலுத்தப்பட வேண்டும். இதன்படி, விற்கப்படாத 19 மனைகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் கீழ்வருமாறு.

ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படி,

விற்கப்படாத 19 மனைகள் – பரப்பளவு 22798.00 ச. அடி. (அல்லது) 2151.95 ச.மீட்டர்

ஒரு ச.மீ. க்கு ரூ. 30/– வீதம் 2151.95 ச.மீ. க்கு ரூ. 64559/– ஐ, வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இத்தொகையில், செலான் நாள் 14.02.2019, சார்நிலை கருவூலம், வாலாஜாபேட்டை இல் ரூ. 64559/– ஐ கீழ்க்கண்ட தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

"0217 - Urban Development
60 - Other Urban Development Scheme
800 - Other receipts
AT - Receipts under Regularisation of Unapproved Layout and Plots - DTCP"
(DP. Code: 0217 - 60 - 800 - AT 0007)

3. வளர்ச்சிக் கட்டணம்.

தமிழ் நாடு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப் படுத்துதல் சட்டம், 2017, பிரிவு 10 இன்படி வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 75/– வீதம் செலுத்தப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வரிசை எண். 02 இல் கணக்கிட்ட விவரப்படி ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 75/– வீதம் 2151.95 சதுர மீட்டருக்கு வளர்ச்சிக் கட்டணமாக கேட்பு வரைவோலை எண். 350975 நாள் 20.02.2019 மற்றும் 350977 நாள்21.02.2019– சின்டிகேட் வங்கி, இராணிப்பேட்டை கிளையின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 01, 02 இல் குறிப்பிட்ட அரசாணைகள், பார்வை 03 இல் குறிப்பிட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் கடிதம், பார்வை 04 இல் குறிப்பிட்ட பேரூராட்சியின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் ஆகியவற்றின்படி, மேற்படி விற்கப்படாத மனைகள் (மனை எண் 3,15 மற்றும் 16(ப) பூங்கா இடம் தவிர) 19 (மனை எண்1,2,4,5,6,7,8,10,11,12, 16(ப), 17,18,19,20, 21,22,23,26) மனைகளை, கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட் பட்டு, வரன்முறைப்படுத்தி உத்திரவிடப்படுகிறது.

1. வரன்முறைப்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவின் பரிசீலனைக்கு நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் இரத்து செய்யப்பட்டலோ, எவ்வித முன்னறிவிப்புமின்றி, வரன்முறைப்படுத்திய உத்திரவுகள் இரத்து செய்யப்படும்.
2. வரன்முறைப்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனை அமைவிட இடம், அரசால் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், வரன்முறைப்படுத்திய உத்திரவுகள் இரத்து செய்யப்படும்.

செயல் அலுவலர்,
அம்மூர் முதல் நிலை பேரூராட்சி.
வேலூர் மாவட்டம்
26/2/19

பெறுநர்
திரு. எம். ஜெகன்நாதன்
28, அம்மூர் ரோடு, இராணிப்பேட்டை
நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.